07-03-2014 Dinathanthi

## சென்னை மெட்ரோ ரெயில் சேவையில்:

# சுரங்கம் தோண்டும் பணி 34 சதவீதம் நிறைவு

## திட்டமிட்ட காலத்தில் பணி முடிக்க நடவடிக்கை

சென்னை, மார்ச்.7–

சென்னையில் மெட்ரோ ரெயில் சேவைக்காக தோண்டப்பட்டு வரும் சுரங்கப்பாதையில் 34 சதவீதம் பணிகள் நிறைவடைந்து உள்ளது.

இதுகுறித்து மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:–

### சுரங்கம் தோண்டும் பணி

மெட்ரோ ரெயில் சேவைக்காக சென்னையில் 36 ஆயிரத்து 308 மீட்டர் தூரத்திற்கு அதாவது சராசரியாக 36 கிலோ மீட்டர் தூரம் சுரங்கம் தோண்ட முடிவு செய்யப்பட்டது. இதற்காக 12 சுரங்கம் தோண்டும் எந்திரங்கள் (டனல் போரிங் மிஷின்) பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளது.

இவை சராசரியாக ஒரு மாதத்திற்கு 900 மீட்டர் முதல் ஆயிரம் மீட்டர் வரை சுரங்கம் தோண்டி வருகிறது. கடந்த பிப்ரவரி 28–ந்தேதி வரை 12 ஆயிரத்து 378 மீட்டர் அதாவது சுமார் 12½ கிலோ மீட்டர் தூரத்திற்கு சுரங்கம் தோண்டப்பட்டு உள்ளது. அதன்படி 34.1 சதவீதம் சுரங்கம் தோண்டும் பணி நிறைவடைந்து உள்ளது.

### பணிகள் நடந்து வரும் பகுதி

ஷெனாய் நகர் – திருமங்கலம், சைதாப்பேட்டை – ஏஜி டி.எம்.எஸ், மே தின பூங்கா– ஏஜி டி.எம்.எஸ். மே தின பூங்கா சென்டிரல் மெட்ரோ, வண்ணாரப்பேட்டை – எழும்பூர் மெட்ரோ ஆகிய வழித்தடங்களில் சுரங்கம் தோண்டும் பணி நடந்து வருகிறது.

நேரு பூங்காவிலிருந்து எழும்பூர் ரெயில் நிலையம் வரை உள்ள 948 மீட்டர் தூரம் இரண்டு வழித்தடங்களிலும் சுரங்கம் தோண்டும் பணி நிறைவடைந்து உள்ளது. பச்சையப்பன் கல்லூரி முதல் ஷெனாய்நகர் 966 மீட்டர், பச்சையப்பன் கல்லூரி முதல் நேரு பூங்கா வரை 1,474 மீட்டர், கீழ்ப்பாக்கம் முதல் நேரு பூங்கா வரை 576 மீட்டர் தூரம் பணிகள் தொடங்கப்படவில்லை.

### ஷெனாய் நகர்– திருமங்கலம்

ஷெனாய் நகர் முதல் திருமங்கலம் வரை 2,797 மீட்டர் நீளம் பணியில் 1,740 மீட்டர் தூரம் பணிகள் நிறைவடைந்து உள்ளன. இதன் மூலம் இப்பகுதியில் 62.2 சதவீதம் பணிகள் நிறைவடைந்து உள்ளது. அதேபோல் வண்ணாரப்பேட்டை முதல் எழும்பூர் மெட்ரோ வரை 4,445 மீட்டர் வரை உள்ள பணியில் 2,240 மீட்டர் தூரம் அதாவது 50.4 சதவீதம் பணிகள் நிறைவடைந்து உள்ளது.

பல்வேறு காரணங்களால் மெட்ரோ ரெயில் நிறுவனத்தில் சுரங்கம் தோண்டும் பணி கடந்த மாதம் சற்று வேகம் குறைந்தது. தற்போது அதனை துரிதப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. பணிகள் நிறைவடைந்த பகுதிகளில் பயன்படுத்தப்பட்ட எந்திரங்கள் வேறு பகுதியில் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளது. பணிவேகம் குறைந்தாலும் திட்டமிட்ட காலத்தில் முடிக்கப்படும். இந்நிலையில் டெல்லியில் நடந்த மெட்ரோ ரெயில் குறித்த மாநாட்டில் 2014–ம் ஆண்டில் பணிநடந்து வரும் மெட்ரோ ரெயில் நிறுவன பணிகளில் சிறந்த நிறுவனமாக சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்திற்கு சான்றிதழ் வழங்கப்பட்டு உள்ளது.

இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.